இரட்சிப்பு

# பாவம்




| | |
|---|---|
| அநீதி எல்லாம். | புறங்கூறுதல். |
| சகலவித அநியாயம். | கோள் சொல்லுதல். |
| தீய நோக்கம். | அவதூறு பண்ணுவது. |
| சொற்களில் மிகுதி. | தூஷிப்பது. |
| பிறனை அவமதிப்பது. | கெட்ட வார்த்தை பேசுவது. |
| பொல்லாத சிந்தனை. | வம்பு வார்த்தை பேசுவது. |
| பாரபட்சம் (பட்சபாதம்) . | வாக்குவாதம் பண்ணுவது. |
| நன்மை செய்ய அறிந்தும் செய்யாதது. | பொய் சொல்லுவது. |
| விசுவாசத்தினால் வராத யாவும். | பொய் சாட்சி. |
| ஏழைகளை ஒடுக்குவது. | பெருமை. |
| கூலிக்காரனை ஒடுக்குவது | பொறாமை. |
| திருடுதல் (களவு , பணம், பொருள், கருத்துக்கள்) | அகந்தை. |
| பொருளாசை. | கபடு. |
| கொள்ளையிடுதல். | வஞ்சகம். |
| பில்லிசூனியம். | வீம்பு. |

| | |
|---|---|
| விக்கிரகங்களை வழிபடுவது, வணங்குவது. | விபச்சாரம். |
| கோபங்கள். | வேசித்தனம். |
| பகைகள். | ஓரினச்சேர்க்கை. |
| விரோதங்கள். | காமவிகாரம். |
| தீய வைராக்கியங்கள். | களியாட்டுகள். |
| சண்டைகள். | ஆபாச படம் பார்ப்பது. |
| பிரிவினைகள். | ஆபாச புத்தகம் படிப்பது.. |
| மார்க்க பேதங்கள். | .ஆபாச பேச்சுகள் |
| வெறிகள். | |
| குடிவெறி. | பெற்றோருக்கு கீழ்ப்படியாதது. |
| புகைபிடிப்பது. | பெற்றோரை கனம் பண்ணாதது |
| போதை மருந்து பயன்படுத்துவது. | |
| மூக்குப்பொடி பயன்படுத்துவது. | |
| புகையிலை பயன்படுத்துவது. | பிறர் மனதை புண்படுத்துவது. |
| வெற்றிலைப்பாக்கு பயன்படுத்துவது. | மற்றவர்களை பாவத்திற்குள் இழுப்பது. |

வேதாகமம்

இது தீமையானது என்று குறிப்பாக வேதாகமத்தில் கூறப்படாத எந்த ஒரு செயல்பாட்டையும் தீமையானது என்று கூறிவிட முடியாது. அது ஒருவருடைய தனிப்பட்ட தெரிந்தெடுப்பைப் பொறுத்ததாய் இருக்கிறது.

எ.கா.: நகை அணிந்து கொள்வது.
வெள்ளை உடை உடுத்துவது.

ஒரு செயல் சரியானதா? தவறானதா?

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

- இந்த செயலினால் தேவனோடு உள்ள ஐக்கியம் பாதிக்கப்படுகிறதா? (இதற்கு பதில் இல்லையெனில் அந்த செயல் சரியானது) .
- இந்த செயல் தேவனைப் பிரியப்படுத்துமா? சந்தோஷத்தைக் கொடுக்குமா? என ஆராய்ந்து அறிய வேண்டும்.
- இந்த காரியம் எனக்கு பக்திவிருத்தியைக் கொடுக்குமா? அல்லது பலவீனத்தை உண்டாக்கி என்னை அழித்துவிடுமா? என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும்.

இந்த இடத்திற்கு செல்வது சரியா? தவறா?

- இயேசு கிறிஸ்துவை உங்களுடன் அழைத்துச் செல்லக் கூடிய எந்த இடத்திற்கும் நீங்கள் செல்லலாம்.
- கேள்விக்குறியோடு எதையும் செய்யாதீர்கள். (ரோமர் 14:5)
- நமது ஆவிக்குரிய வளர்ச்சியை தடை செய்கிற காரியங்கள் அனைத்தும் பாவமே.

**For Reference:**

| | |
|---|---|
| 1கொரிந்தியர் 3:16,17 6:9,10,18,19 8:12 | வெளியாகமம் 21:7 |
| ரோமர் 1:24,25,29-31 14:23 | மத்தேயு 5:28 15:19 |
| மாற்கு 7:21,22 | கலாத்தியர் 5:20 |
| 1யோவான்3:15 5:17 | நீதிமொழிகள் 24:9 |
| யாக்கோபு 4:17 & 2:9 | 2கொரிந்தியர் 12:20 |
| கொலோசெயர் 3:8,9 | 1சாமுவேல் 15:23 |
| உபாகமம் 5:8,9 24:14,15 | 2கொரிந்தியர் 8:21 |
| நீதிமொழிகள் 14:21 | 1பேதுரு 2:2 |

- அநீதி எல்லாம் 1 யோவான் 5 : 17
- சொற்களின் மிகுதி நீதி 10 : 19
- தீய நோக்கம் நீதி 24 : 9
- நன்மை செய்ய அறிந்தும் செய்யதக்கவர்களுக்க செய்ய தவறுவது யாக் 4:17
- பாரபட்சம் (பட்சபாதம்) காட்டுவது யாக் 2 : 9 வேசித்தனம் 1 கொரி 6:18
- விபச்சாரம் (ஸ்திரியை இச்சையோடு பார்ப்பது – நேரிலோ (அ) படத்திலோ மத் 5 : 28
- பில்லி சூன்யம் 1 சாமு 15:23

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

- விக்கிரகங்களை வழிபடுவது நமஸகரிப்பது, சேவிப்பது உபா 5:8,9
- திருடுவது களவு செய்வது (வேறொருவருக்கு சொந்தமானதை பணம், பொருள், கருத்துகளை அவர் அறியாமல் பயன்படுத்துவது) யாத் 20:15,2 கொரி 8:21
- கொலை, முற்கோபம், சகோதரனை பகைப்பது 1 யோவா 3:15
- ஏழைகளை கூலிக்காரனை ஒடுக்குவது பொழுது போக்குமுன்னே கூலியை கொடாதது உபா 24:14,15
- கெட்ட வார்த்தை பேசுவது, தூஷனம், வம்பு வார்த்தைகளை பேசுவது கொலோ 3:8
- தகப்பனையும் தாயையம் கனம் பண்ணாதது கீழ்படியாதது ரோமர் 1:30, யாத் 21:15,17 (அடிப்பது, மரியாதை குறைவாக பேசுவது, வேதனைபடுத்தும் செயல்களை செய்வது பண உதவி மற்ற உதவிகளை செய்யாதது)
- பொய் சொல்வது யாத் 20:16 கொலோ 3:9
- பிறனை அவமதிப்பது நீதி 14:21
- பிறர் மனதை புண்படுத்துவது 1 கொரி 8:12
- பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சிப்பது (நமக்கு வேண்டுமென நினைப்பது)
- புறங்கூறுதல் கோள் சொல்லுதல் 1 பேது 2:2,2 கொரி 12:20, லேவி 19:16
- வைராக்கியம், விரோதம், பகை, சண்டை ரோமர் 1:29-32
- பொறாமை, வாக்குவாதம் நியாயபிரமாணத்தை மீறுகிறது பாவம் 1 யோவா 3:4
- கர்த்தரின் வார்த்தையை அசட்டை பண்ணுவது கற்பனையை மீறுவது எண் 15:31
- கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குவது உபா 5:11, லேவி 19:12

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

- கர்த்தருடைய நாமத்தில் பொய் ஆணையிடுதல் மத் 5:33-37 (தேவனுடைய நாமத்தை அவசியமில்லாமல் வீணாய் உச்சரித்தல் தேவன் செய்யாததை செய்ததாக கூறுவது தேவனுக்காக பொய் கூறுவது)
- விசுவாசத்தினால் வராத யாவும் ரோமர் 14:23, பொறுத்தனை பண்ணி செலுத்தாவிடில் உபா 23:21,22
- ஒரின சேர்க்கை (ஆணோடு ஆண், பெண்ணோடு பெண்) (லேவி 18:22, ரோமர் 1:24,27) மிருகத்துடன் சேர்க்கை (லேவி 18:23 – 24)
- தன்னடைய முறையான கணவன் (அ) மனைவி தவிர்த்து வேறு நபருடன் பாலியல் உறவு வைத்துக் கொள்ளுதல் (மற்றவர்களை நிர்வாணப்படுத்துதல்) கூடாது (லேவி 18:6 – 30, 20:11,17,19-21, 18:6)
- திருமண உறவு தவிர்த்து மற்றவர்களிடம் ஒருவன் செய்யும் எல்லாவகையான பாலியல் முறைகேடான செயல்களும் விளையாட்டுகளும் அடுத்தவரின் உடல்பகுதிகளை தொடுதல் (நீதி 6:29,26, 1 கொரி 6:18, 1தெச4:3)
- ஆண் பெண் பாலுறவு தொடர்பான காட்சிகளை கொண்ட திரைப்படங்களையோ ஆபாசமான காட்சிப்படங்களை கொண்ட, பாலியல் உணர்வை தூண்ட கூடிய கெட்ட புத்தங்களை பார்ப்பது படிப்பது (மத் 5:28, யாக் 1:14, எபி 13:4, 1கொரி6:15,18)
- உணர்ச்சிகளை தூண்டும்படி பெண்கள் ஆடை அணிவது எந்த மனுஷியினால் இடறல் வருகிறதோ அவளுக்கு ஐயோ (மத் 18:6,7)

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

- இருதயத்தில் அக்கிரமசிந்தை (சங் 66:18) பெருமையான எண்ணங்கள் கா்வமான பாா்வை (நீதி 21:4) பண ஆசை (எபி 13:5) பண ஆசை எல்லா தீமைக்கும் வோ் (1 தீமோ 6:10)

## பாவத்தின் குணாதிசயம்

- பாவம் தனக்கு கீழ்படிகிறவா்களை கட்டாயப்படுத்தி அடிமைப்படுத்தி விடுகிறது (யோவான் 8:34, ரோமா் 6:16,17)
- பாவம் அழிக்கிறதாய் இருக்கிறது. சாீர, ஆத்மா மரணத்தை உண்டாக்குகிறது (யாக் 1:15, எபே 2:1,5, ரோமா் 8:6)
- பாவம் அழிக்கும் பெரிய சக்தி
    1. எய்ட்ஸ் 90% பாவத்தினால் உண்டாகிறது
    2. குடும்பங்கள் பாவத்தினால் உடைகிறது
    3. திருமணங்கள் விவாகரத்தில் முடிவடைகிறது இதற்கு முக்கிய காரணம் போதை மருந்துகளும் கெட்ட நடவடிக்கைகளும் ஆகும்.
- பாவம் பரவுகிறதாக தொற்றி கொள்ளுகிறதாய் இருக்கிறது (நீதி 13:20) (தோழனிடமிருந்து பரவுகிறது) (நீதி 23:20) 1 கொாி 5:11, நீதி 22:24
- பாவம் எல்லை தாண்டி செல்லும் (ஏசாயா 1:23) ஒருபாவம் அநேக பாவங்களுக்கு வழிநடத்தும்
- தற்கொலைகள், கொலைகள் மூா்க்கவெறி பெரும்பாலும் பாவத்தின் விளைவே
- சாலைகளில் ஏற்படும் சாலைவிபத்துகளில் 50%க்கு மேல் போதை பொருட்களின் விளைவே.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

# பாவத்தின் விளைவு

- மனதனின் மனதை குருடாக்கிறது (எபே 4:18)
- மனசாட்சியை மழுங்கச் செய்கிறது (1 தீமே 4:1)
- ஒழுக்கத்தை கெடுக்கிறது (எபே 4:22, ரோம 3:10-18)
- ஆத்துமாவை அழித்து நித்திய நரகத்திற்கு அனுப்புகிறது (ரோமர் 7:23) வஞ்சிக்கிறதாய் இருக்கிறது (எபி 3:13) உங்களை தொடர்ந்து பிடிக்கும் (எண் 32:23)
- எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் (கலா 6:7)
- வாற்படியில் படுத்திருக்கும் (ஆதி 4:7)
- பாவத்தின் சம்பளம் மரணம் (ரோம 6:23)
- பாவ சந்தோஷம் அநித்தியமானது (தற்காலிகமானது) (எபி 11:25) பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும் (எசே 18:4(b)) பாவம் எலும்புகளில் வலி ஏற்படுத்தும் (நொறுக்கும்) (சங் 38:3) பாவம் ஜனங்களை வெட்கபட வைக்கும் (நீதி 14:34)
- பாவம் செய்யும் போது மக்களால் அவமதிக்கபடுவோம். கேலி செய்யப்படுவோம். (தானி 9:16)

வேதாகமம்
இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

இரட்சிப்பு

## பாவ பரிகாரம்

- உன்னுடைய பாவமான நிலையை உணர்ந்து ஒத்துக்கொள். பாவத்தை அறிக்கையிடு (யோவா 1:9)
- மனம்திரும்பு, உன் மனதை மாற்று. பாவத்திலிருந்து கிறிஸ்துவிடம் திரும்பு (லூக்கா 13:3,1தெச 1:9)
- உன் இருதயத்திலே கிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டு அறிக்கை செய் (யோவான் 1:12, ரோமர் 10:9,10)

மனிதன் உதவியற்ற பாவி. தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள முற்றிலும் சக்கியற்றவன். நல்ல (நியாயபிரமாண) கிரியைகளினாலே இரட்சிக்கப்பட முடியாது.

இயேசு கிறிஸ்து ஒருவரே நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்க முடியும். பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க முடியும். இருக்கிற வண்ணமாக இயேசுவிடம் வா.

மனந்திரும்பு உனது எண்ணத்தையும் நோக்கத்தையும் மாற்று

பாவத்தை விட்டு திரும்பு.

தேவனை நோக்கி திரும்பு.

துர்குணத்தை விட்டு திரும்பு.

இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

